### தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம்! 2026 தேர்தலில்

# கழக அரசின் சாதனைகளை துண்டுப் பிரசுரங்கள் மூலம் கடை கடையாக வழங்குவோம்!

## கவிஞர் காசிமுத்து மாணிக்கம் தலைமையில் தீர்மானம் நிறைவேற்றம்!




சென்னை, மார்ச் 5 - 2026 தேர்தலில் கழக அரசின் சாதனைகளை துண்டு பிரசுரம் மூலம் கடை கடையாக விநியோகம் செய்வோம் என்று கவிஞர் காசிமுத்து மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம், அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில், மாநில செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் தலைமையில், மாநில நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கீழ்கண்ட தீ ர் ம ா ன ங் க ள் நிறைவேற்றப்பட்டன.

தளபதி - கலைஞரின் விரிவு தளபதியிடம் இருக்கிறது - கலைஞரிடமிருந்த புரிவு பரிவு ஒன்றிய அரசிடமிருந்து அநீதி நேரக்கண்டால் எழும் இவரிடமிருந்து எரிவு - இவரால் தான் சரியான நேரத்தில் சரியான சமயத்தில் சரியானது சனநாயகத்துக்கு நேர்ந்த சரிவு தப்பாகுமா என்ன தமிழ் மக்களின் தெரிவு நீங்கியது அதன் நீண்ட கழுத்தில் பத்தாண்டுகளாக இருந்த நெறிவு இவருக்கும் வெற்றிக்கும் இனி இல்லை பிரிவு

என இந்தியாவே பாராட்டும் பண்பாட்டின் சிகரம் தமிழக முதல்வர் தளபதிக்கு பிறந்தநாள் வாழ்த்து கூறும் வகையில் தமிழகம் முழுவதும் மார்ச் மாதம் 1ஆம் தேதி பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிப்பது என்றும், அறுசுவை உணவு வழங்குவது என்றும், நலத்திட்ட உதவிகள் வழங்குவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

ஒன்றிய அரசு நிதி தராமல், நெருக்கடி தமிழ்நாட்டிற்கு தந்த போதும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை அடுத்த ஆண்டு முதல் ரூ. 2,000 என அறிவித்தமைக்காகவும், முன்கூட்டியே திட்டமிட்டு ரூ.5,000 வழங்கியமைக்காகவும், 15 லட்சம் மக்களுக்கு கூடுதலாகவும் மொத்தம் 1 கோடி 30 லட்சம் மக்களுக்கும் வழங்கியமைக்காகவும், தமிழக முதல்வர், வள்ளலார் போல் வாடிய பயிர் கண்டு வாடிடும் தளபதி அவர்களுக்கு நன்றி கூறுகிறோம்.

வணிகர்கள் இடர் நீக்கிட 20,000 கோடிக்கு மேல் வரிகளை, கடன் நிலுவை வரிக்கடன்களை தள்ளுபடி செய்த பூமி பந்தின் அதிசய நிகழ்வு உலா வரும் தளபதிக்கு கோடான கோடி நன்றி அறிவித்தலை தெரிவித்துக் கொள்கிறோம்.

மாநகராட்சி, நகராட்சி, உள்ளாட்சி கடைகளின் குத்தகைக்காலம் 9 ஆண்டுகள் என்று இருந்ததை, 12 ஆண்டுகளாக உயர்த்தி வணிகர்களின் வாழ்வாதாரத்தை நிரந்தரமாக பாதுகாத்து வரும் தமிழக முதல்வர் தளபதிக்கு நன்றி கூறுகின்றோம்.

மக்களை பாதிக்கும் வகையில் செயல்படும் ஒன்றிய அமைச்சர்கள் நிர்மலா சீதாராமன், தர்மேந்திர பிரதான் செயல்களை கண்டிப்பதோடு நிதி ஒதுக்கி தந்திட வேண்டுகிறோம்.

முந்தைய ஆட்சி காலத்தில் முடக்கி வைக்கப்பட்டு இருந்த வணிகர்கள் நல வாரியத்தை மீண்டும் சீரமைத்து 20 வாரிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை 30 ஆக உயர்த்தி ஆணை பிறப்பித்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

மே-5 தினத்தை வணிகர் தினமாக அறிவித்ததுடன், குடும்ப நலநிதி உதவித்தொகை 5 லட்சமாக உயர்த்திய முதல்வர் தளபதிக்கு நன்றி கூறுகிறோம்.

வணிகர் நல வாரிய உறுப்பினர்கள் தமிழக அரசின் நலத்திட்ட உதவிகளை பெறுவதற்கான பட்டியலில் வரு வருமான வரி உள்ளவர்களுக்கு இல்லை என்பதை பரிசீலனை செய்திட வேண்டுகிறோம்.

தமிழ்நாடு அறிவித்தது போல ஒன்றிய அரசும் "புதிய சமாதான திட்டத்தை" அறிவித்து நீண்ட கால நீதிமன்றங்களின் நிலுவையில் உள்ள வழக்குகளை முடிவுக்கு கொண்டு வர வேண்டுகிறோம்.

மூத்த முன்னோடிகள் அ.தி.மு.க.வில் இல்லை. அப்படியே இருந்தாலும் எடப்பாடி அவர்களை இருக்க விடுவதில்லை என்கிற கொள்கை வழிகாட்டுதல்படி சமீபத்தில் எடப்பாடியால் விலக்கப்பட்ட முன்னாள் முதல்வர் ஓ. பி.எஸ் அவர்களை இருகரம் நீட்டி வரவேற்று, ஆரத் தழுவிய தமிழக முதல்வரை, திராவி டத்தின் அடையாளத்தை வரவேற்கிறோம்.

மதுபான கொள்கை வழக்கு என பொய் வழக்கு போட்டு, கொல்லைப்புறமாக பிடித்த டெல்லி ஆட்சியை கலைத்துவிட்டு, அங்கே மீண்டும் தேர்தல் நடத்தி "ஜனநாயகன்" படத்தைத் தான் விடவில்லை. ஜனநாயகத்தையாவது காப்பாற்றுங்கள் என ஒன்றிய அரசை வேண்டுகிறோம்.

பொய் வழக்கு வலையை உடைத்து வெளியே வந்த கெஜ்ரிவால், மணிஷ் சிசோடியாவை, கவிதாவை இருகரம் நீட்டி உள்ளத்தால் உறவாடி உவகையுடன் வரவேற்கிறோம்.

2026 தேர்தலை முன்னிட்டு வர்த்தகர்களுக்கு தி.மு.க.வின் தமிழக அரசு செய்த சாதனைகளை, துண்டு பிரசுரம் மூலம் கடை கடையாக சென்று விநியோகம் செய்வதுடன், தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்திட இந்த மூன்று மாதமும் உழைத்திட தீர்மானித்திருக்கிறோம்.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதியில், ”வெல்லும் தமிழ்ப்பெண்கள் ”ஸ்டாலின் மகளிர் படை பெரம்பலூர் நகரம், அரானாரையில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால் தலைமையில் வீடு,வீடாக சென்று கழக அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறினார்கள். தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அன்பில் தர்மலிங்கம்

**மார்ச் 5 (1993)**



**நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகிய இயக்கங்களில் பங்கு கொண்டதன்றி தி.மு.க. உருவானபோது கழகத்தில் முக்கிய பங்கேற்று பணியாற்றினார்.**

**1938ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்பு போராட்டம், மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**திருச்சி மாவட்டச் செயலாளராக 1950 முதல் 1972 வரை பணியாற்றினார்.**

**திருச்சி மாவட்டத்தில் 1956ஆம் ஆண்டு நடைபெற்ற தி.மு.க. 2வது மாநில மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராக பணியாற்றியவர்.**

**மாநாட்டிற்கு கழகத்தவரை அண்ணா வருமாறு அழைப்பு விடுக்கும்போது அதற்காக திராவிட நாடு இதழில் எழுதிய தம்பிக்கு மடலில் "அன்பில் அழைக்கிறார்" என்றே தலைப்பிட்டு எழுதினார்.**

**சட்டமன்ற உறுப்பினராகவும், தலைவர் கலைஞர் அமைச்சரவையில் வேளாண்மைத் துறை மற்றும் வருவாய்த் துறை அமைச்சராகவும் பணியாற்றினார்.**

**தலைமைக் கழகச் சார்பில் தலைவர் கலைஞர் அவர்கள் 1986ஆம் ஆண்டு "பெரியார் விருது" வழங்கி சிறப்பித்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.3.2026) சென்னை குறிஞ்சி முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட இருக்கும் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக 23 மாவட்டங்களில் திறனகங்களை காணொலி காட்சி மூலம் தொடங்கி வைத்தார். உடன் அரசு அதிகாரிகள் உள்ளனர்.



முதல்வர் தளபதியார் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன், 3.03.2026 அன்று குன்னூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஸ்பிரிங் பீல்டு பகுதியில் குன்னூர் பட்டு வளர்ச்சித்துறை சார்பாக ரூ.75.இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட பட்டு உலகம் பொழுதுபோக்கு பூங்காவினை மாண்புமிகு தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் அவர்கள் நீலகிரி மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம். ராஜு ஆகியோர் பொது மக்களின் பயன்பாட்டுக்கு திறந்து வைத்து பார்வையிட்டனர். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு குன்னூர் நகர மன்ற தலைவர் திருமதி.சுசிலா அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# சேலம் கிழக்கு மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. அறிவிப்பு!



சேலம், மார்ச் 5 - சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சேலம் கிழக்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் இன்று (05.03.2026 வியாழன்கிழமை) காலை 11.00 மணிக்கு வாழப்பாடியில் உள்ள

தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் மாவட்ட கழக அவைத் தலைவர் திரு. மு.ரா.கருணாநிதி அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை கழகத்தால் நியமிக்கப்பட்ட தொகுதிப் பார்வையாளர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், முன்னாள், இன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், BLA2, BDA, BLC, வெல்லும் தமிழ் பெண்கள், மற்றும் கழக முன்னோடிகள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1. ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்

திமுக நிர்வாகிகள் சந்திப்பு திருச்சி மாநாடு மார்ச் 9.

2. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மதுரை மாவட்டம் – வலையங்குளம் கிராமம் மதுரை – தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையில்

# சாலை விபத்தில் உயிரிழந்த மாணவியின் பெற்றோருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க, ஸ்டாலின் அறிவிப்பு !

சென்னை, மார்ச் 5 -

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டம், வலையங்குளம் கிராமம், மதுரை - தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த மாணவியின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டம், ஆவியூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. முத்துக்குமரன் என்பவரின் மகள் செல்வி. துர்கா தேவி (வயது 17) என்பவர் 02.03.2026 அன்று காலை சுமார் 9.00 மணியளவில் அவரது உறவினருடன் இருசக்கர வாகனத்தில் மதுரை தெப்பக்குளம் சாலையில் உள்ள தனியார் மேல்நிலைப்பள்ளிக்கு பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதச் சென்றுகொண்டிருந்தபோது மதுரையிலிருந்து தூத்துக்குடி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் அவர் பயணம் செய்துகொண்டிருந்த இருசக்கர வாகனத்தின் மீது அரசுப் பேருந்து ஒன்று எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் செல்வி. துர்காதேவி பலத்த காயமடைந்து மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த மாணவி செல்வி. துர்காதேவி யின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது பெற்றோருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று இலட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அறிவித்துள்ளார்.

# நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜூ அறிக்கை!



நீலகிரி, மார்ச் 5 - நீலகிரி மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் கே.எம்.ராஜூ விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாளை(6-3-2026 - வெள்ளிக்கிழமை) காலை 11.30 மணி அளவில் மாவட்டக் கழக அவை தலைவர் கே.போஜன் தலைமையில், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், கழக தேர்தல் பணி செயலாளர், அரசு தலைமை கொறடா கா. ராமசந்திரன் மற்றும் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் ஆர்.பி.பரமேஷ் குமார் (கூடலூர்) தென்றல் செல்வராஜ் (உதகை), கோவை திராவிடமணி (குன்னூர்) ஆகியோர் முன்னிலையில் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமை கழக நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு-பொதுக்குழு உறுப்பினர்கள், நகர- ஒன்றிய - பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. 9-3-2026 கழக தலைவர் தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் திருச்சியில் நடைபெற உள்ள கழக மாநில மாநாட்டில் கலந்து கொள்வது குறித்து.

2.2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்து.

3.கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியம், எறையூர் ஊராட்சியில் குருசாமி என்பவர் குடிசை வீடு தீப்பற்றி எரிந்து சேதமடைந்தது. மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் நேரில் பார்வையிட்டு ஆறுதல் கூறி அரிசி, காய்கறி , மளிகை பொருட்கள் உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் வழங்கி, ஆறுதல் கூறினார். உடன் ஒன்றிய கழக செயலாளர் ந.ஜெகதீஸ்வரன், ஒன்றிய கழக பொருளாளர் சின்னதுரை, மாவட்டப் பிரதிநிதி எஸ்.அழகுவேல் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.